முருகப்பெருமான் துணை

**மகான் பிரும்மமுனிவர் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**21.05.2022**, சனிக்கிழமை

1. அருட்பெருங் கருணை கடலே
அன்னதான ஞான வள்ளலே
அருட்சுடரேற்றி பேருலகம் தன்னில்
அற்புதம் படைக்க வந்த அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது விடைதிங்கள்
இருமூன்றோர் திகதி காரி வாரம்
(சுபகிருது வருடம் வைகாசி மாதம் 07 ம் நாள், 21.05.2022 சனிக்கிழமை)
இயம்பிடுவேன் அருளாசி தன்னை
3. தன்னிலே பிரும்மமுனிவர் யானும்
தரணி பாதுகாப்புற உரைப்பேன்
மண்ணுலகம் தீவினை சூழா
மகத்துவமான ஞான பலமடைய
4. பலமடைய பண்பான மக்களை
படைக்கவே ஞானம் அருள
வலம் வந்து பிரணவக் குடிலை
வணங்கும் மக்களை கொண்டு
5. கொண்டே ஞானப் படைகளை
குருவரங்கன் நிறுவி இனிதே
தொண்டர்கள் உயர் சீடர்களெனும்
தெய்வீக நல் அடையாளமுடன்
6. அடையாளமுடன் மாற்றம் சடுதி
அகிலம் அடையக் கூடும்
தடையற தரும ஞான வழியும்
தரணியெங்கும் வளரச் செய்து
7. செய்துமே அரங்கமகானின்
சேவை என்பது உலகமாற்ற
மெய்ஞான உயர் மார்க்கமதாகும்
முன்மொழிந்து பின் தொடர்ந்து மக்கள் வர
8. வருகவே இருக்கின்ற உலகியல்
வக்கிர கொடூர செயல்முறை
வருமுலகில் தொடரா விலகியே
வையகம் பாதுகாப்பு அமைதி காண்கும்
9. காண்கவே தெளிவு நிறைந்த
கடமை மீறா செயல் தலைமை
உண்மை உழைப்பு நிறைந்த
உயர் அதிகார பலம் கூடியும்

10. கூடியே உலகினில் வளர்ச்சி
குறைவிலா சமூக மலர்ச்சி
நாடியே சன்மார்க்க வழி வந்து
ஞானவான்கள் ஆட்சியாக மாறும்

11. மாறுதலை தரும் ஞானி
மாதவசி அரங்கன் நிழலே
ஆறுதலும் மாறுதலுமாக உலகோர்க்கு
அமைந்து அதிக பாதுகாப்புத் தரும்
அருளாசி முற்றே

–சுபம்–